திரு. சி. வி. ராஜகோபால் : கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இரண்டும் ஒன்றுகயிருந்து இரண்டு மாவட்டங்களாக பிரித்த பிறகு ஏராளமான நஷ்டம் வருவதாகச் சொல்லப்படுகிறது. அதில் கிடைக்கவேண்டிய ரெவின்யூ கிடைக்காமல் நஷ்டம் வருவதாகச் சொல்கிறுர்கள். அது உண்மைதாஞ ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இரண்டும் ஒரே மாவட்டம்தான். பேர் வைப்பதில் தான் தகராறு ஏற்பட்டது. சேலம் மாவட்டத்தில் இருப்பதால், பிற்போக்கான இந்தப் பகுதிகளுக்கு நல்ல கவனம் செலுத்தமுடியவில்லை என்று மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில், இந்த மாவட்டம் இருந்தது அந்தப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் வருவாய் என்று சொன்னல் புன்செய் நில வரியிருந்தது. அதை ரத்து செய்துவிட்ட காரணத்தால் வருவாய் இல்லாவிட்டாலும், தனி மாவட்டமாகிய பிறகு அபிவிருத்தி வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன.

திரு. எஸ். ராஜமார்த்தாண்டம்: புதுக்கோட்டையைத் தனி ஜில்லாவாக பிரிக்க கோரிக்கை வந்ததும், அது பரிசீலனையில் இருப்பதாகவும் பார்த்தேன். அது எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பத்திரிகை அளவிலே வருகிற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வருவதில்லை.

திரு. டி. வி. தேவராஜ முதலியார் : சேலம் மாவட்டம் பிரிக்கும்போது வட ஆர்க்காடு மாவட்டமும் இரண்டாக பிரிக்கப்படப் போவதாகச் சொன்னர்கள். ஏற்கெனவே சொன்ன அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட தகவல்கள் அரசாங்கத்திடம் இல்லை. வெளியிலே அப்படிப்பட்ட தகவல்கள் உலாவலாம்.

Sugar

* 195—*Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) the average quantity of sugar produced in Tamilnad per annum ;

(*b*) whether the Union Government have ordered that the Mills can sell 40 per cent of the production in the open market :

(*c*) the quantiy of sugar that can be obtained out of 40 per cent by the State Government from the Co-operative sugar Mills ; and

(*d*) how the Government will distribute it ?

சர்க்கரை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் சராசரி ஒரு வருடத்தில் உற்பத்தியாகும் சர்க்கரை அளவு எவ்வளவு ?

(இ) 40 சதம் மில்கள் இஷ்டம்போல் விற்கலாம் என மத்திய அரசு உத்தரவிட்டதா ?

(உ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் 40 சதவிகிதத்தில் தமிழக அரசுக்கு எவ்வளவு கிடைக்கும் ?

(எ) இதை எப்படி விநியோகிக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது ?

7th March 1968]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) கடந்த ஐந்து ஆண்டுகளில், ஒவ்வோராண்டும் சராசரி சர்க்கரை உற்பத்தி அளவு 1,73,200 டன் ஆகும்.

(இ) ஆம்.

(உ) இது ஒவ்வொரு ஆலேயும் உற்பத்தி செய்யும் அளவைப் பொறுத்ததாகும். இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலிருந்து இந்த நடைமுறையின்படி 1967–68-ம் ஆண்டில் 4,724 டன் சர்க்கரை கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ) இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற சர்க்கரை இம் மாநிலத்தில் மொத்தமாகப் பயன்படுத்துவோருக்குக் கிடைப்பது உறுதி செய்வதற்காகவும், அவர்களது சர்க்கரைத் தேவைகளைப் பெறுவதில் அவர்களுக்குள்ள இடர்ப்பாடுகளைப் போக்குவதற்கும் இம் மாநில அரசாங்கம் சென்னையிலுள்ள தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தையும் இம் மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் உட்பட சர்க்கரை ஆலைப் பிரதிநிதிகளையும் கட்டுப்பாடின்றி விற்கக்கூடிய சர்க்கரை அளவை இம் மாநிலத்திற்குள்ளேயே விற்கும்படிக் கேட்டுக்கொண்டது. தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடின்றி விற்கக்கூடிய சர்க்கரை அளவை இம் மாநிலத்திற்குள் தங்கள் தொழிற்சாலை வாயிலில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 350 என்ற விதிதப்படி விற்பதற்கு ஒப்புக்கொண்டன. உணவு வழங்கல் ஆணையர் குறிப்பிட்டுள்ள ஒதுக்கீட்டின்படி இம் மாநிலத்தில் சர்க்கரை அதிகம் பயன்படுத்துவோரிடையே கட்டுப்பாடின்றி விற்கத்தக்க இச்சர்க்கரை பகிர்ந்தளிக்கப்படுகிறது. தனிப் பட்ட இந்த ஏற்பாடே இப்போது செயலிலுள்ளது. இப்போதுதான் 27-ம் தேதி முடிவடைந்து மீண்டும் 3 மாதத்திற்கு இந்த ஏற்பாடு நீடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, 40 சதவிகிதம் தனியார் துறையில் சர்க்கரை மில்களுக்கு கிடைக்கக்கூடியது. மொத்தம் எவ்வளவு ? அதை என்னென்ன விலைக்கு விற்கச் சொல்லியிருக்கிறது? பாக்கியுள்ள சர்க்கரை எப்படி வினியோகிக்கப்படுகிறது ? மொத்தம் சர்க்கரை எவ்வளவு கிடைக்கிறது ? கூட்டுறவு ஆலை மூலம் எவ்வளவு சர்க்கரை கிடைக்கிறது ? 40 சதவிகிதம் அவர்கள் இஷ்டம்போல் விற்கச் சொல்லிவிட்டால், பாக்கியுள்ள 60 சதவிகிதம் என்ன செய்கிறார்கள் ? கட்டுப்பாட்டில் என்ன விலை ? எவ்வளவு லாபம் சர்க்காருக்கு மொத்தமாக கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பெரிய விவாதத்திற்கே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். திரும்பவும் சொல்கிறேன். இந்த மாநிலத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையை ஒதுக்கும் அதிகாரம் டெல்லியிடம் இருக்கிறது. ஒரு மாதத்திற்கு எவ்வளவு வேண்டுமென்று 22-ம் தேதியை கணக்கிட்டு அடுத்த மாதம் 22-ம் தேதிவரை சர்க்கரை மாதமாகும். 16,000 என்று இருந்ததை கொஞ்சங்கொஞ்சமாக தளர்த்தி 9,000 என்ற நிலைமைக்கு வந்தது. அப்போது 40 சதவிகிதம் வெளிச் சந்தைக்கும், 60 சதவிகிதம் வெளி ரேஷன் கார்டு என்றும் வைக்கப்படவில்லை. இருந்தாலும் இந்திய அரசாங்கம் புதிய கொள்கையை கொண்டுவந்தார்கள். 60 சதவிகிதம் உற்பத்தியாகிறதை அரசாங்கம் பெற்று ரேஷனுக்கு கொடுப்பதும், மற்ற 40 சத விகிதம் உற்பத்தியை இந்தியாவில் எந்த மாகாணத்திலும், வேண்டுமானால் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம் என்று ஆலைக்காரர்களுக்கு உதவியாக சர்க்கரை கொள்கையை இந்திய அரசாங்கம் கொண்டு வந்தது. ஏற்கெனவே நம் மாநிலத்தில் பற்றுக் குறை இருப்பதால் சாதாரண மக்களுக்கு இது கெடுதல் செய்யும் என்பதை இந்த அரசாங்கம் அழுத்தம் திருத்தமாக மத்திய அரசாங்கத்திற்கு சொல்லியது. இருந்தாலும் கேட்காமல் சர்க்கரை சட்டத்தை கொள்கையைக் கொண்டு வந்துவிட்டார்கள். ஏற்கெனவே கரும்பு விவசாயிகள் அதிகமாகப் பணம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், வெளி மாகாணங்களுக்கு கொண்டு செல்கிற காரணத்தால், இந்த

மாகாணத்தில் நெருக்கடி ஏற்பட்டது. மேலும் வெளியே போகக் கூடாது என்பதற்குத் தடை போட மத்திய அரசாங்கம் நமக்கு ஒப்புதல் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, நல்லெண்ணத்தை வைத்து, கரும்பு ஆலைக் காரர்களை எல்லாம் கூப்பிட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும், நானும் பல தடவை பேசி "நீங்கள் இந்த 60 சதவிகிதத்தை சர்க்காருக்கு கொடுத்து விடுங்கள். மற்றபடி வேறு எங்கும் விற்காமல் மீதியை இங்கேயே விற்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டதின் பேரில், அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். அதற்கு விலை ரூ. 350 என்று போடப்பட்டது. சர்க்கார் துறையில் கொள்முதலில் வாங்குகிற விலை ஏறக்குறைய 162 ரூபாய். நாம் ரூ. 101 75-க்கு வெளியிலே விற்கிறோம். அதனால் நஷ்டம் வருகிறது. சர்க்கரை ஆலைகளுக்குக் கூட நஷ்டம் வருகிறது. இருந்தாலும் இதை "மேக்கப்" செய்கிறார்கள். நமது மாநிலத்தில் இது அற்புதமான திட்டம் என்று மற்ற மாநிலங்களில் சொல்கிறார்கள். ஆந்திராவில், கேரளாவில், பீகாரில் இல்லாத நிலைமையை நம்முடைய சர்க்கார் இங்கு செய்திருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 700 ரூபாய்க்குக் கூட விற்கப் படுகிறது என்று சொன்னார்கள். அங்குள்ள பழைய முதலமைச்சர் அந்த விலை கொடுத்து தன்னுடைய வீட்டுக் கல்யாணத்திற்கு வாங்கினார் என்று கூட சொன்னார்கள். இந்தத் திட்டம் இன்னும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

Drought condition in Periyakulam and Palani taluks

*** 196 — Q.—Thiru N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state : --

(*a*) whether it is a fact that sowing was not done because of failure of rain for the last six months which resulted in drought in Periyakulam and Palni taluks of Madurai district ; and

(*b*) if so, whether the Government will take any famine relief measures ?

பெரியகுளம், பழனி தாலுகாக்களில் பஞ்ச நிலை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு—வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் தாலுகா, பழனி தாலுகா முதலிய இடங்களில் சென்ற 6 மாதமாக மழை இல்லாததால் விதை விதைப்பு நடைபெறாமல் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பது தெரியுமா ?

(இ) ஆமெனில், பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் தமிழக அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, என்னுடைய சொந்தக் கிராமத்திலேயே 300 ஏக்கர் நஞ்செய் தீய்ந்து போய்விட்டது. தேனியிலிருந்து போடி வரை 10 மைல் அளவிற்கு கால்வாய்களில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து விட்டன. கண்டமநாயக்கனூர் பகுதியில் எல்லா நிலமும் காய்ந்து ஒரு மணி நெல் கூட விளையவில்லை. அந்த பரிதாபகரமான நிலைமை ஏற்பட்ட பிறகும்கூட, இந்த அரசாங்கம் கல் நெஞ்சத்தோடு "இல்லை" என்று சொல்வது சரியா ? ஏரிகள்தான் வரண்டுவிட்டதென்றால் அமைச்சர்கள் நெஞ்சும் வரண்டுவிட வேண்டுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியகழகன் : அரசிற்கு கல் நெஞ்சம் இடையாது. கல்போல் இருந்து திரும்பச் சொல்கிறேன். "மாடு, கன்று கள் இறக்க வேண்டும், அங்கேயிருக்கிறவர்கள் சாப்பாட்டிற்கு இல்லாத